# கருணை மனப்பான்மை

ஒருமுறைஇறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் ஹசன் (ர) அவர்கள் மீது பாசத்தைப்பொழிந்துகொண்டிருந்தார்கள். ஒரு நபித்தோழர் அங்கு வந்த போது இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய பேரனுக்கு முத்தம் செய் வதைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள், கூறினார்கள், இறைத்தூதரே ﷺ எனக்கு பத்து மகன்கள் உள்ளனர், நான் யாருக்கும் முத்தமிட்டதில்லை. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: مَنْ لاَ يَرْحَمُ لاَ يُرْحَمُ பொருள்: *யார் அன்பும் கருணையும் காட்டுவதில்லையோ அவர்களுக்குக் கருணை காட்டப்படமாட்டாது.*(متفق عليه)

இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒருமுறை நபித்தோழர்களுக்கு (ர) ஒரு மனிதரைப்பற்றிக் கூறினார்கள், ஒருவர் தொடர்ந்து நடந்துசென்றுகொண்டிருந்த நிலையில் களைத்துவிட்டார், அவருக்கு மிக்கத்தாகம் ஏற்பட்டது, வழியில் ஒரு கிணறு இருந்தது, அதிலிருந்து தண்ணிரை எடுத்துக்குடித்தார், பின்பு நடக்கலானார். திடீரென்று அவருக்கு ஒரு நாய் தென்பட்டது, கடுமையான தாகத்தின் காரணமாக அதனுடைய நாவு தொங்க ஆரம்பித்தது, தன்னுடைய தாகத்தைத் தணிக்க அது ஈரமான மண்ணை நாவால் நக்கிக்கொண் டிருந்தது. தாகத்தால் அவதிப்படும் நாயைப்பார்த்த அவனுக்கு மனம் இளகியது, தன்னுடைய தாகம் ஞபாகத்திற்கு வந்தது, அவன் கிணற்றில் இறங்கி தன்னுடைய காலணியில் தண்ணீரை நிரப்பிக்கொண்டுவந்து அந்த நாயின் தாகத்தைத்தணித்தான். இந்த மனிதனுடைய இச்செயலைக் கண்டு அல்லாஹ்வும் கருணைகொண்டு அவனுடைய பாவங்களை மன்னித்துவிட்டான். நபித்தோழர்கள் (ர) கேட்டார்கள், இறைத்தூதரே, விலங்கினங்களுக்குக் கருணைகாட்டினாலும் நமக்குக் கூலி கிடைக்கிறதா? கூறினார்கள், ஆம், ஒவ்வொரு உயிரினத்திற்கும் தண்ணீர் கொடுப்பதிலும் கூலி உண்டு (புக்ஹாரி).

www.uzairalahi.com

கருணைகாட்டும் பண்பு ஒரு உயர்ந்த மனப்பாங்காகும். மென்மையான பண்பு, பாசம், தயவு காட்டுவது, மன்னிப்பது ஆகியன இதன் அறிகுறிகளாகும். ஒரு முஸ்லிம் மென்மையான சுபாவம் மற்றும் இளகிய மனதுடையவராக இருப்பார், மக்களின்பால்அனுதாபமும்அவர்களுடைய துயரங்களைப் பகிர்ந்துகொள்ளும் பண்புமுடையவராகவும் இருப்பார். அனைவருடனும் நல்ல முறையில் நடந்துகொள்வார், தேவையுள்ளவர்களுக்கு உதவியாக இருப்பார், ஏழை எளியவர்கள்மீதும் அனாதைகள் மற்றும் விதவைகள்மீதும் கருணையுள்ளவராகவும் கவலை துயரங்களிலும் மூழ்கியிருப்பவர்களுக்ககுஆதரவு காட்டுபவராகவும் இருப்பார். ஒரு கவிஞர் கூறுகிறார்:

خنجر چلے کسی پہ تڑپتے ہیں ہم امیر
سارے جہاں کا درد ہمارے جگر میں ہے

*கருணை அல்லாஹ் தஆலாவின் மேன்மையான பண்புகளில் மகத்தான ஒன்றாகும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

كَتَبَ رَبُّكُمْ عَلَىٰ نَفْسِهِ ٱلرَّحْمَةَ ۝٥٤ **(الأنعام: 54)**

*பொருள்: உங்கள் இறைவன் கருணை புரிவதைத் தன்மீது கடமையாக்கிக் கொண்டுள்ளான். (அல் அன்ஆம் 54). மற்றொரு இடத்தில் கூறுகிறான்:*

فَٱللَّهُ خَيْرٌ حَٰفِظًا ۖ وَهُوَ أَرْحَمُ ٱلرَّٰحِمِينَ ۝٦٤ **(يوسف: 64)**

*பொருள்: அல்லாஹ்தான் மிகச்சிறந்த பாதுகாவலன், அவன் கருணையாளர்களிலேயே மிகவும் கருணையாளன்.(யூசுஃப் 64).*

*ஒரு முஸ்லிம் தன்னுடைய ஒவ்வொரு செயலையும்* بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ *என்று துவங்கி அல்லாஹ்வின் கருணையினைப் பெறுகிறான். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் தஆலா அனைத்து படைப்புகளையும் படைத்தபின் தன்னுடைய அர்ஷின்மீது எழுதிவிட்டான்: என்னுடைய கருணை என்னுடைய கோபத்தையே மிஞ்சிவிட்டது* **(متفق عليه).**

*அல்லாஹ்வின் கருணைக்கு எல்லையே இல்லை அதனை அளவிடவும் முடியாது, அதனுடைய விரிவு மற்றும் விஸ்ஃதீரணத்தை அல்லாஹ் மட்டுமே அறிவான், அல்லாஹ் தாமாகவே கூறுகிறான்:*

وَرَحْمَتِي وَسِعَتْ كُلَّ شَيْءٍ ۚ فَسَأَكْتُبُهَا لِلَّذِينَ يَتَّقُونَ ۝١٥٦ **(الأعراف: 156)**

*பொருள்: ஆயினும், என்னுடைய அருள் அனைத்தையும் சூழ்ந்திருக்கின்றது, எனவே, எவர்கள் இறைவனுக்கு அஞ்சுகின்றார்களோ (அவர்களுக்காக நான் அந்த அருளை உரித்தாக்குவேன்).(அல் ஆராஃப் 156). இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் தஆலா தன்னுடைய ரஹ்மத்தை (கருணையை) நூறு பாகங்களாகப் பிரித்தான், அதில் 99 பாகங்களைத் தன்னிடமே வைத்துக்கொண்டான், ஒரு பாகத்தை மட்டுமே உலகில் இறக்கிவைத்தான். அந்த ஒரு பாகத்தின் பலனாகத்தான் அனைத்துப் படைப்புகளும் ஒன்றோடொன்று கருணையுடனும் கனிவுடனும் நடந்து கொள்கின்றன. ஒரு கால்நடை தன்னுடைய காலின் குளம்பு தன்னுடைய குட்டியைப்பாதிக்கக்கூடாது என்று பாதுகாப்பாகவே வைத்துக்கொண்டிருப்பது இதன் காரணமாகவேதான்.* **(متفق عليه) .**

www.uzairfalahi.com

இறைத்தூதர் ﷺ அவர்களின் சிறப்புமிக்கப் பண்புகளில் கருணையும்
பாசமும் அடங்கும். அதனைப்பற்றி அல்லாஹ் தஆலா திருக்ஃகுர்ஆனில்
இவ்வாறு கூறுகிறான்:

لَقَدْ جَآءَكُمْ رَسُولٌ مِّنْ أَنفُسِكُمْ عَزِيزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيصٌ عَلَيْكُم

بِٱلْمُؤْمِنِينَ رَءُوفٌ رَّحِيمٌ ﴿١٢٨﴾ **(التوبة: 128)**

*பொருள்: உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கினடறார். நீங்
கள் துன்பத்திற்கு ஆளாவது அவருக்கு மிகக் கடினமானதாக இருக்கின்றது.
மேலும், உங்களுடைய வெற்றியில் பேராவல் கொண்டவராகவும் நம்பிக்
கையாளர்கள்மீது அதிகப் பரிவும் கருணையும் உடையவராகவும் இருக்
கின்றார்.(அத் தவ்பா 128).* மற்றொரு இடத்தில் கூறுகிறான்:

وَمَآ أَرْسَلْنَـٰكَ إِلَّا رَحْمَةً لِّلْعَـٰلَمِينَ ﴿١٠٧﴾ **(الأنبياء: 107)**

*பொருள்: நபியே, நாம் உம்மை உலகத்தாருக்கு அருட்கொடையாகவே
அனுப்பியுள்ளோம். (அல் அன்பியா 107).* வேறு ஒரு இடத்தில் கூறுகிறான்:

فَبِمَا رَحْمَةٍ مِّنَ ٱللَّهِ لِنتَ لَهُمْ ۖ وَلَوْ كُنتَ فَظًّا غَلِيظَ ٱلْقَلْبِ لَٱنفَضُّوا۟ مِنْ حَوْلِكَ ۖ ﴿١٥٩﴾ **(آل عمران: 159)**

*பொருள்: அல்லாஹ்வின் மாபெரும் அருளினாலேயே நீர் இவர்களிடம்
மென்மையாக நடந்துகொள்கின்றீர். நீர் கடுகடுப்பானவராகவும் வன்
னெஞ்சராகவும் இருந்திருந்தால் இவர்கள் உம்மைவிட்டு விலகிப்போயி
ருப்பார்கள்.(ஆலு இம்ரான் 159).* இறைத்தூதர் ﷺ அவர்களின் சிறப்பு
களைப்பற்றி ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் கூறுகிறார்கள், அவர் வாழ்நாள்
முழுவதும் எந்த ஒரு பெண்மீதும் கையை ஓங்கியதில்லை.(அஹ்மத்)
இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய மகன் ஹஜ்ரத் இப்ராஹீம் (ர)
அவர்களுடைய மரணத்தருவாயின்போது அவர்களை முத்தமிட்டவர்க
ளாக இருந்தார்கள், அவர்களுடைய பாச உணர்வின் காரணமாக கண்
களில் கண்ணீர் பொங்கி வடிந்துகொண்டிருந்தது. பிரபல நபித்தோழரான
ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ர) அவர்கள் இதனைக்கண்டு ஆச்ச
ரியப்பட்டவர்களாகக் கூறினார்கள், இறைத்தூதரே ﷺ நீங்களா? அவர்
கள் ﷺ கூறினார்கள், ஆம், இப்னு அவ்ஃப் இதுவே கருணை மனப்பான்
மையின் உணர்வுகள் வெளியாகும் விதமாகும், கண்கள் கண்ணீர் சிந்தும்,
மனம் துயரத்தால் நிரம்பியிருக்கும் ஆனால், அல்லாஹ்வின் நாட்டத்
திற்குமுன் தலை குனிந்துவிடுகிறது, இப்ராஹீமே, உன்னுடைய பிரிவி
னால் நாங்கள் துயரத்தில் மூழ்கியுள்ளோம்.

www.uzairfalahi.com

இறைத்தூதர் ﷺ அவர்களின் பாசத்தின் நிலை எவ்வாறிருந்தது என்றால் அவர்கள் தொழுகையை ஆரம்பிக்கும்போது நீண்ட தொழுகையாகத் தொழவேண்டும் என்று நினைப்பார்கள், ஆனால், தொழுதுகொண்டிருக் கும்போது ஒரு குழந்தை அழுவதைக்கேட்டால் உடனே தொழுகையைச் சுருக்கிக்கொள்வார்கள். அவர்களே ﷺ கூறுகின்றார்கள், நான் தொழு கையை நீண்டதாகத் தொழவேண்டும் என்று விரும்புவேன், ஆனால், ஒரு குழந்தை அழும் சப்தத்தைக்கேட்கும்போது அக்குழந்தையின் தாயின் கவலை மற்றும் மனக்கஷ்டத்தை நினைக்கிறேன், தொழுகையை நான் சுருக்கிக்கொள்கிறேன் **(متفق عليه)** .

நபிமொழியில் கூறப்பட்டுள்ளது: **ارْحَمْ مَنْ فِي الْأَرْضِ يَرْحَمْكَ مَنْ فِي السَّمَاءِ** பொருள்: *உலகத்திலுள்ளவர்கள் மீது கருணை காட்டுங்கள் வானத்திலிருப்பவன் உங் கள்மீது கருணை காட்டுவான்.* (அத்தபரானி, அல்ஹாகிம்). இறைத்தூதர் ﷺ அவர்கள் மற்றொரு நபிமொழியில் கூறுகிறார்கள்: கருணை மனப் பான்மை மற்றும் அன்பு காட்டுவதில் முஸ்லிம்கள் அனைவருமே ஒரே உடலைப்போன்றவர்கள், அதன் ஒரு அங்கம் நோய்வாய்ப்படுமானால் முழு உடலும் நோயினால் பாதிக்கப்படுகிறது (முஸ்லிம்).

ஒரு முஸ்லிமுடைய வாழ்க்கை முழுவதும் கருணை மற்றும் அன்பு பாராட் டும் வகையிலேயே இருக்கும். அவர் மற்றவர்களுக்கு ஆதரவாகவும் நலனை நாடுபவராகவும் இருப்பார். பெற்றோருடன் எல்லை கடந்த அன்பும் மென்மையான அணுகுமுறையுடையவராகவும் இருப்பார். வேலைக்காரர் கள் மற்றும் பணியாளர்களுடன் அன்புடனும் நல்லமுறையிலும் நடந்து கொள்வார், ஒரு பார்வையற்றவரையும் கைப்பிடித்து சரியான வழியில் செல்லவிடுவார். மற்றவர்களைப்போன்றே தன்னுடனும் நலனையே நாடும் பண்புமுடையவராக இருப்பார். தனக்கு இவ்வுலகிலும் மறுமையிலும் நஷ்டத்தை ஏற்படுத்தும் அனைத்து விஷயங்களையும் தவிர்த்து, தன்னு டைய மறுமையின் வாழ்க்கை சீரழியக்கூடாது என்பதற்காக சிறிய பெரிய பாவச்செயல்களையெல்லாம் தவிர்த்துவிடுவார். தன்மீது தன்னுடைய சக்திக்கு அதிகமாக தன்னை சிரமத்திற்கு ஆளாக்கும் வகையில் எந்த ஒரு பாரத்தையும் போட்டுக்கொள்வதில்லை. தன்மீது எவ்வித பாதிப்பும் ஏற் பட்டுவிடக்கூடாது என்பதற்காக தீய பழக்கங்களை முற்றிலும் தவிர்த்து சிறுசிறு விஷயங்களிலும் மிகவும் கவனமாக இருப்பார். புகை பிடித்தல் மற்றும் பொதுவாகவே பயன்படுத்தப்பட்டுவரும் போதைப்பொருட்களை யும் தவிர்த்துவிடுவார். தன் ஆரோக்கியத்தைப்பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார். அதற்கும் மேலாக அவர் எந்த ஒரு விலங்கிற்கும் தொல்லைகொடுப்பதில்லை, செடிகள் மரங்களை அழிப்பதில்லை, அவர் பூமியின் மீது நடமாடும் கருணை மற்றும் கனிவின் உதாரணமாக காணப்

www.uzairfalahi.com

படுவார். கருணை மனப்பான்மையின் இந்த சிறப்புகளின் காரணமாகவே இறைத்தூதர் ﷺ அவர்கள் கடுமை மற்றும் கண்டிப்புடனான அணுகு முறையைத் தடுத்துள்ளார்கள், அவ்வாறு நடந்துகொள்பவர்களை மற்றவர் கள்மீது கருணைகாட்டாத இரக்கமற்ற மனதுடையவராகக் கருதியுள்ளார் கள். அவர்கள் ﷺ கூறுகிறார்கள், கருணை காட்டாத ஒருவன் இரக்கமற்ற வனாகத்தான் இருக்கமுடியும். (அபூ தாவூத், திர்மிதி) மற்றொரு நபிமொழி யில் கூறப்பட்டுள்ளது: யார் மற்றவர்கள்மீது கருணை காட்டுவதில் லையோ அல்லாஹ்வும் அவன்மீது கருணைகாட்டுவதில்லை. **(متفق عليه)** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள், ஒரு பெண் தான் வளர்த்து வந்த பூனையின்மீது கருணை காட்டவில்லை என்பதற்காக மட்டுமே நரகத்திற்கு செல்லவேண்டியதாயிற்று, அவள் அந்த பூனையைக் கட்டிப் போட்டுவிட்டாள், தானும் அதற்கு உணவளிக்கவில்லை, அது சுற்றித் திரிந்து உணவு தேடிக்கொள்ளும் வகையில் திறந்துவிடவுமில்லை.ஒரு உண்மையான முஸ்லிம் கனிவு இல்லாதவனாக இருக்கவே முடியாது, அவன் ஒரு பசியுள்ள ஒருவனைக்கண்டு அவனுக்கு உணவு அளிக்காமல் எவ்வாறு இருக்கமுடியும்? ஒரு கவலைகளால் தவிக்கும் மனிதனைக்கண்டு அவனுக்கு உதவி செய்யாமல்எவ்வாறு இருக்கமுடியும், ஒரு அனாதையைக் கண்டு அவனுடைய தலையின்மீது ஆதரவான கைகளால் தடவிக் கொடுக் காமல் எவ்வாறு இருக்கமுடியும். இவ்வாறெல்லாம் செய்யாதிருப் பவன் நிச்சயம் இரக்கமற்றவனாகவும் கல்நெஞ்சக்காரனாகவும்தான் இருக்க முடியும்.

* * *

www.uzairalahi.com